# இயல் 7.6 - தகவல் செயலாக்கம்

பயிற்சி எண் :: 7.6.5.1.C

தகவல் செயலாக்கம் - செயல்வழிப்படம் - வரையறையும் உதாரணமும்

Information processing - Preparation of Flowchart - Definition & Example

## தகவல் செயலாக்கம் - செயல்வழிப்படம் - வரையறையும் உதாரணமும்

**செயல்வழிப்படம்** என்பது ஒரு செயலை அல்லது கணக்கீட்டை செய்து முடிப்பதற்கான வழிமுறைகளைக், குறிப்பிட்ட சில வடிவங்களைப் பயன்படுத்தி விளக்கும் படம் ஆகும்.

### செயல்வழிப் படத்தில் பயன்படுத்தப்படும் வடிவங்களும், அவற்றின் செயல்பாடும்

| வடிவம் | பெயர் | பொருள் |
|---|---|---|
| | அம்புக்குறி | வடிவங்களை ஒன்றுடன் ஒன்று இணைக்கவும், செயல்வழிப் படத்தின் ஓட்டத்தை குறிக்கவும் பயன்படுகிறது. |
| | தொடக்கம் / முடிவு | செயல்பாட்டின் தொடக்கத்தையும், முடிவையும் குறிக்கப் பயன்படுகிறது. |
| | உள்ளீடு / வெளியீடு | தரவுகளை உள்ளீடு செய்யவும், வெளியீடு செய்யவும் பயன்படுகிறது. |
| | செயல்பாடு | கூற்றினைக் கணக்கிட அல்லது குறிக்கப் பயன்படுகிறது. |
| | தீர்மானப் பெட்டி | செயலின் நிலை ஆம் அல்லது இல்லை என்பதைப் பொறுத்து அமைகிறது. |


### செயல்வழிப் படத்தின் வகைகள்

செயல்வழிப் படம், தொடர் செயல்வழிப் படம் மற்றும் நிபந்தனை செயல்வழிப் படம் என இரு வகைப்படும்.

#### தொடர் செயல்வழிப் படம் - உதாரணம்

எந்த வரிசையில் ஒரு செயலைத் தீர்க்க வேண்டுமென்ற செயல்பாடுகளை **தொடர்-செயல்வழிப் படம்** விவரிக்கிறது.


ஒரு பல்பொருள் அங்காடியில் இருந்து சில சாக்லேட்டுகளை வாங்குவதற்கான செயல்வழிப் படம் வரைக.




#### நிபந்தனை செயல்வழிப் படம் - உதாரணம்

செயலில் உள்ள நிபந்தனையைப் பொறுத்து தீர்வு காணும் வழிமுறையை **நிபந்தனை செயல்வழிப் படம்** விவரிக்கிறது.

உதாரணமாக, **PhonePe** மற்றும் **GPay** செயலிகளின் மூலம், கடையில் வாங்கிய பொருட்களுக்கான பணத்தைச் செலுத்துவதற்கான செயல்வழிப் படத்தை வரைக.




## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/he6bu26AvFs


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 17th January, 2023 :: 10:17 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**